RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 216 | ஆகஸ்டு.8 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்தி அரசாணை வெளியீடு




சென்னை: ஆக.8-

கோயில் பணியாளர்களுக்கு துறை நிலை ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணை விவரம்: கோயிலில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் துறை நிலை ஓய்வூதியம் ரூ.4 ஆயிரத்தில் இருந்து ரூ.5 ஆயிரமாகவும், துறை நிலை குடும்ப ஓய்வூதியம் ரூ.2 ஆயிரத்தில் இருந்து, ரூ.2,500 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என 202526 சட்டப்பேரவை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக, ஓய்வு பெற்ற கோயில் பணியாளர்களுக்கான துறை நிலை மாத ஓய்வூதியத்தை ரூ.4 ஆயிரத்தில் இருந்து ரூ.5 ஆயிரமாக உயர்த்தி வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. இதேபோல, ஓய்வு பெற்ற கோயில் பணியாளர்களின் மறைவுக்கு பிறகு, அவர்களது நேரடி வாரிசுகளுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.2,500 ஆக உயர்த்தி வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கட்டணமில்லா அறுபடைவீடு பயணம்: விண்ணப்பிக்க செப்.15 கடைசி நாள்



சென்னை, ஆக.08-

இந்து சமய அறநிலையத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: 2025-26ம் நிதியாண்டுக்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டப்பேரவை அறிவிப்பை நிறைவேற்றும் வகையில் முருகப் பெருமானின் அறு படை வீடுகளான திருப் பரங்குன்றம், திருச் செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர் சோலை ஆகியவற்றுக்கு மூத்த குடிமக்கள், ஒரே முறையாக சென்று தரிசனம் செய்யும் வகையில் கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் பக்தர் கள் இந்து மதத்தைச் சார்ந்தவராகவும், 60 வயதுக்கு மேல் 70 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்கு மிகாமல் இருப்பதோடு, அதற்கான வருமானச் சான்றிதழை வட்டாட்சியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும். போதிய உடல் தகுதி உள்ளதற்கான மருத்துவச் சான்றுடன், ஆதார் நகல் இணைக் கப்பட வேண்டும். ஆன் மிகப் பயணத்துக்கான விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் நேரில் பெற்றோ அல்லது www.hrce.tn.gov.in என்ற இந்து சமய அறநிலையத் துறை இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்தோ விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் செப்.15ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் வேடர் புளியங்குளம்,சாக்கிலிபட்டி ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை,வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மணி தாட்கோ மேலாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர்.முகாமில் மண்டல துணை வட்டாரவளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலாளர் வேல்முருகன்,ரவி கிருஷ்ணா,சூரக்குளம் செல்வம் மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொது மக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.




■ மதுரை மாவட்டம் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் சிந்துபட்டி ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை வட்டாட்சியர் பாலகிருஷ்ணன்,வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கபாண்டியன் ஆகியோர் துவக்கி வைத்தனர்..முகாமில் மண்டல துணை வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் ஊராட்சி செயலாளர் தெய்வராஜா மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் ஏராளமானோர் பங்கேற்று மனுக்களைப் பெற்றனர்.

## எம்.எஸ்.சுவாமிநாதன் வழியில் மாணவர்கள் சமூகப் பணியாற்ற வேண்டும்



சென்னை: ஆக.8-

பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட எம்.எஸ்.சுவாமிநாதனின் நூற்றாண்டுப் பிறந்தநாளையொட்டி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், ‘பசுமைப் புரட்சிக்கு வித்திட்டுப் பசியாற்றிய மானுடநோக்கு கொண்ட அறிவியலாளர் 'பாரத ரத்னா' எம்.எஸ்.சுவாமிநாதனின் நூற்றாண்டுப் பிறந்தநாள் இன்று.

தமது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான எம்.எஸ். சுவாமிநாதன் பெயரிலான ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நிலம் வழங்கி, குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணனுடன் இணைந்து, அங்குள்ள ஜேஆர்டி டாடா (JRD Tata) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தைத் திறந்தும் வைத்தார் அன்றைய முதல்வர் கருணாநிதி.

அவரது வழியிலான நமது திராவிடமாடல் அரசும், போரூர் வெட்லாண்ட் பார்க், தஞ்சை ஈச்சங்கோட்டை வேளாண் கல்லூரி ஆகியவற்றுக்குத் எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரைச் சூட்டியுள்ளதோடு, பயிர்ப் பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்றும் அறிவித்து அவரது நினைவைப் போற்றி வருகிறோம்.

காலநிலை மாற்றம் உட்பட இன்று நாம் எதிர்கொண்டு வரும் பல சவால்களைப் பல பத்தாண்டுகளுக்கு முன்பே கணித்து, எச்சரித்த மாபெரும் தொலைநோக்காளரான எம்.எஸ்.சுவாமிநாதன் அடியொற்றி, மேலும் பல மாணவர்கள் சமூகத்துக்குப் பணியாற்ற வேண்டும் என அவரது நூற்றாண்டில் கோரிக்கையாக முன்வைக்கிறேன். தந்தையின் பணியையும் புகழையும் போற்றும் சவுமியா சுவாமிநாதன் பணி சிறக்கவும் வாழ்த்துகள்’ எனத் தெரிவித்துள்ளார்.

## தூய்மைப் பணியாளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை ஸ்டாலின் நிறைவேற்றுவாரா? அன்புமணி



சென்னை: ஆக.8-

தூய்மைப் பணியாளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றுவாரா? என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “சென்னையில் ராயபுரம், திருவிக நகர் ஆகிய மண்டலங்களில் குப்பை அள்ளும் பணி தனியாருக்கு வழங்கப்பட்டதைக் கண்டித்தும், தங்களுக்கு பணி நிலைப்பு வழங்க வலியுறுத்தியும் தூய்மைப் பணியாளர்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்தால் சென்னையில் பல பகுதிகளில் குப்பைகள் அள்ளப்படாமல் நாற்றம் வீசுகிறது. தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் ஏழாவது நாளாக இன்றும் நீடிக்கும் நிலையில், இந்தச் சிக்கலுக்கு தீர்வு காண தமிழக அரசு நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களில் ராயபுரம், திருவிக நகர் ஆகிய இரு மண்டலங்களில் குப்பைகளை அகற்றும் பணி கடந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி முதல் தில்லி எம்.எஸ்.டபிள்யூ சொலுஷன்ஸ் லிமிடெட் (Delhi MSW Solutions Ltd) என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த இரு மண்டலங்களிலும் 5180 தூய்மைப் பணியாளர்கள் குப்பை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வந்தனர்.

அவர்களில் நிரந்தரப் பணியாளர்கள் அம்பத்தூர் மண்டலத்திற்கு மாற்றப்பட்ட நிலையில், தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதுமட்டுமின்றி அவர்கள் அனைவரும் தூய்மைப் பணியை ஒப்பந்தம் எடுத்துள்ள டெல்லி எம்.எஸ்.டபிள்யூ சொலுஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் பணியில் சேரும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அதைக் கண்டித்து தான் போராட்டம் நடைபெற்று வருகிறது.

ஒருபுறம் இதுவரை சுகாதாரப் பணிகளில் ஈடுபட்டு வந்த தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டு விட்ட நிலையில், இன்னொருபுறம் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தை எடுத்துள்ள நிறுவனம், இன்னும் அதன் பணியைத் தொடங்கவில்லை. அந்த நிறுவனத்தில் தூய்மைப் பணிகளை செய்ய போதிய எண்ணிக்கையில் பணியாளர்கள் சேரவில்லை.

அதனால், 7 நாள்களுக்கும் மேலாக குப்பைகள் அகற்றப்படாததால், முகப்பேர், நொளம்பூர், நுங்கம்பாக்கம் ஆகிய பகுதிகளிலும், பெரம்பூர் நெடுஞ்சாலை, சூளை மெயின் ரோடு, சாந்தி காலனி 4வது அவென்யூ மற்றும் நீதிபதி ரத்னவேல் பாண்டியன் சாலையிலும் குப்பைகள் அகற்றப்படாததால் அங்கு தாங்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் கொளத்தூர் தொகுதியின் பல பகுதிகளும் இப்போராட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. தெருவெங்கும் குப்பைகள் மலை போல குவிந்து கிடப்பதால் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இந்த சிக்கலின் தீவிரத்தை முற்றிலும் உணராத சென்னை மாநகராட்சி, ரூ.2,300 கோடி மதிப்பிலான இந்த ஒப்பந்தத்தால் தாங்கள் எந்த வகையில் பயனடையலாம் என்று கணக்குப் போடுவதில் தான் தீவிரம் காட்டி வருகின்றனர்.

தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கை மிகவும் நியாயமானது என்றாலும் கூட, அவற்றை நிறைவேற்றுவதற்கு திராவிட மாடல் அரசு முன்வரவில்லை. தூய்மைப் பணியாளர்கள் சென்னை மாநகராட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டில் பணியாற்றி வந்த போது, அவர்களுக்கு தினமும் ரூ.700 வீதம் மாதம் ரூ.21,000 ஊதியம் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால், இப்போது தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தப் பணியாளர்களாக பணிக்கு சேர்ந்தால் அவர்களுக்கு மாதம் ரூ.15,000 மட்டுமே ஊதியமாக வழங்கப்படும். அவர்கள் 15 ஆண்டுகளுக்கும் மேலாக சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களாக பணியாற்றி வருபவர்கள். அவர்களுக்கு இந்த ஊதியம் போதுமானது அல்ல.

அதுமட்டுமின்றி, தூய்மைப் பணியாளர்கள் இனியும் ஒப்பந்தப் பணியாளர்களாகவே பணியில் நீடிக்க முடியாது. தங்களுக்கு பணி நிலைப்பு வழங்கப்பட்டால் தான் மனநிறைவுடனும், ஓரளவு பொருள் நிறைவுடனும் பணி செய்ய முடியும். அதை விடுத்து அவர்களை பணிநீக்கம் செய்வதை ஏற்க முடியாது. தற்காலிகத் தூய்மைப் பணியாளர்களை பணி நிலைப்பு செய்வதற்காக தமிழக அரசு மற்றும் மாநகராட்சி சார்பில் கூறப்படும் காரணங்கள் ஏற்க முடியாதவை.

முந்தைய அதிமுக ஆட்சியில் 11 மண்டலங்களில் குப்பை அள்ளும் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டதால், இப்போது மீதமுள்ள மண்டலங்களை நாங்கள் தனியாரிடம் ஒப்படைக்கிறோம் என்பது அபத்தமாகும். பணி நீக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் கரோனா பெருந்தொற்று மற்றும் பேரிடர் காலங்களில் தங்களின் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றியவர்கள்.

கரோனா காலத்தில் துப்புரவு பணியாளர்கள் 13 பேர் பணியில் இருக்கும் போது தொற்று ஏற்பட்டு உயிரிழந்தனர். அவர்களின் உழைப்பையும், தியாகத்தையும் கூட மதிக்காமல் பணி நீக்குவது மனிதநேயமற்ற செயலாகும்.

2021ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியின் போது சென்னையில் பல மண்டலங்களின் தூய்மைப் பணி தனியாரிடம் வழங்கப்பட்டதால் 700 பணியாளர்கள் நீக்கப்பட்டனர். அப்போது அது தொடர்பாக சென்னை மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதிய அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், பணி நீக்கப்பட்டவர்களில் 90 விழுக்காட்டினர் பட்டியலினத்தவர் என்பதால் அவர்களை பணி நீக்கம் செய்யக்கூடாது என்று வலியுறுத்தினார்.

இன்று அவரே முதலமைச்சராகியுள்ள நிலையில், பட்டியலினத்தைச் சேர்ந்த தூய்மைப் பணியாளர்கள் நீக்கப்படுகின்றனர். அதிகாரம் என்ற போதை கண்ணை மறைப்பதால், பணி நீக்கப்படுபவர்கள் பட்டியலினத்தவர்கள் என்ற உண்மை அவருக்குத் தெரியவில்லை போலிருக்கிறது.

2021 சட்டப்பேரவைத் தேர்தலின் போது திமுக ஆட்சிக்கு வந்தால், தற்காலிகப் பணியாளர்கள் அனைவரும் பணி நிலைப்பு செய்யப்படுவார்கள் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருந்தால் தூய்மைப் பணியாளர்கள் இப்போது பணி நீக்கப்பட மாட்டார்கள்; மாறாக வாழ்வாதார உத்தரவாதம் பெற்று வசதியாக வாழ்ந்திருப்பார்கள். ஆனால், திமுக சொன்னதை செய்யாமல், துரோகம் செய்ததன் விளைவு தான் தூய்மைப் பணியாளர்கள் வேலை இழந்து வாடிக் கொண்டிருக்கின்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உண்மையாகவே பட்டியலினத்தவர் மீதும், தூய்மைப் பணியாளர் மீதும் அக்கறை இருந்தால், அவர்களை பணி நீக்கம் செய்யும் ஆணையை ரத்து செய்ய வேண்டும். மாறாக தற்காலிக தூய்மைப் பணியாளர்களை அழைத்துப் பேசி பணி நிலைப்பு உள்ளிட்ட அவர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வட்டி விகிதத்தில் மாற்றமில்லை: ரிசர்வ் வங்கி ஆளுநர் அறிவிப்பு

மும்பை, ஆக.08-

ரெப்போ வட்டி விகிதங்களில் மாற்றமில்லை என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இதுகுறித்து ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா கூறியதாவது: பருவ மழைப் பொழிவு மற்றும் நெருங்கி வரும் பண்டிகை காலம் பொருளாதாரத்துக்கு சாதகமாக இருந்தாலும் உலகளாவிய வர்த்தக சவால்கள் தொடர்ந்து நீடிக்கும் நிலை உள்ளது. நடுத்தர கால அளவில் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைகள் பிரகாசமான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.

2025ம் ஆண்டில் ரெப்போ வட்டி விகிதங்களில் 100 அடிப்படை புள்ளிகள் குறைக்கப்பட்ட நிலையில் தற்போது மாற்றமில்லாமல் 5.5% என்ற அளவில் வைத்திருக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. பணவீக்கத்தைப் பொருத்தவரையில் 4 சதவீதத்துக்கும் மேல் உயர வாய்ப்புள்ளது. அதேநேரம் 2025 26 நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மதிப்பீடு மாற்றமின்றி 6.5 சதவீதமாகவே நீடிக்கும். சவாலான வெளிப்புற காரணிகள் இருந்தபோதிலும், இந்தியப் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையுடன் நிலையான வளர்ச்சிப் பாதையில் பயணிக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# நாகர்கோவிலில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் 1030 கிலோ பறிமுதல், அபராத தொகை ரூ.50,000/ மற்றும் ஒரு குடோன் சீல்

கன்னியாகுமரி, ஆக.08-
கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சியில் மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தல் படியும் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மேயர் . அறிவுறுத்தல் படியும், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவு படியும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களான கப், பைகள், பிளேட்கள், கவர்கள் சோதனை நாகர் கோவில் மாநகராட்சி மாநகர் நல அலுவலர் மரு.ஆல்பர் M.மதியரசு தலைமையில் நடை பெற்றது. இந்த சோதனையில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கேப் ரோடு, ஈத்தாமொழி ரோடு, கோட்டார் ஆகிய பகுதிகளில் சுமார் 25 கடைகளில் சோதனை நடைபெற்றது. இந்த சோதனையில் கோட்டார் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ வைகுண்டம் ஸ்டோர் கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 390கிலோ மற்றும் குடோனில் 640கிலோ (அபராத தொகை ரூ.50,000/) பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த குடோனுக்கு மாநகராட்சி அதிகாரிகள் பூட்டி சீல் வைத்தனர்.

# பொழிச்சலூர் ஊராட்சி த.வெ.க சார்பில் கிரிக்கெட் போட்டிக்கு கோப்பை வழங்கப்பட்டது





பொழிச்சலூர், ஆக.08-
செங்கல்பட்டு மாவட்டம் பொழிச்சலூரில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் தளபதி விஜய் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் ஆணைக்கிணங்க செங்கல் பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் வீ.குமார் அவர்களின் அறிவுறுத்தின்படி 03/8/2025 அன்று பொழிச்சலூர் ஊராட்சி பகுதியில் Under 20 கிரிக்கெட் விளை யாட்டு போட்டி மிக சிறப்பாக நடை பெற்றது இந்த கிரிக்கெட் விளையாட்டு போட்டிக்கு பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை சுரடி ரவி அவர்களின் தலைமையில் பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை எஸ்.ஜான் அவர்களின் ஏற்பாட்டில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக பரிசு கோப்பைகள் வழங்கப்பட்டது முதல் பரிசு வெற்றி கோப்பை பொழிச்சலூர் ஊராட்சி பகுதி தலைமை த.வெ.க எஸ்.ஜான், இரண்டாம் பரிசு வெற்றி கோப்பை ஒன்றிய இளைஞரணி தலைமை த.வெ.க எஸ்.பார்த்திபன், மூன்றாம் பரிசு வெற்றி கோப்பை மாவட்ட இளைஞரணி தலைமை த.வெ.க பி.கவின் ஆகியோர் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது இதில் தமிழக வெற்றிக்காக நிர்வா கிகள் உட்பட கிரிக்கெட் வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# சிவகங்கை நகரில் தெருநாய்கள் கால்நடைகளை கட்டுப்படுத்த சேர்மனிடம் கோரிக்கை மனு

சிவகங்கை, ஆக.08-
சிவகங்கை பொது மக்கள் நலன் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு சங்கம் சார்பில் சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்திடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது அதில் சிவகங்கை நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதியில் தொடர்ந்து வெறி பிடித்த நாய்கள் மற்றும் தொற்று பிடித்த நாய்கள் உலா வருவதால் நடந்து மற்றும் வாகனங்கள் செல்பவர்களை அச்சுறுத்தி துரத்துகிறது இருசக்கர வாகனங்களில் செல்வோர் பதட்டத்தில் கீழே விழுந்து விபத்து ஏற்படுகிறது இதனால் பல உயிர் இழப்பு ஏற்படுகிறது சாலை மற்றும் தெருக்களில் சுற்றித் திரியும் கால்நடைகளால் விபத்து ஏற்படுவது அடங்கும் மேலும் ஒரு சில பகுதியில் பன்றிகள் சுற்றித் திரிவதால் நோய் தொற்று ஏற்படும் அபாயமும் உள்ளது இதனை கருத்தில் கொண்டு மேலும் சிவகங்கை விபத்தில்லா மாவட்டமாக மாற்றுவதற்கு முதல் நடவடிக்கையாக (வெறி பிடித்த)தெரு நாய் கால்நடைகளை கட்டுப்ப டுத்த வேண்டும் என்று அதில் குறிப்பிட்டு இருந்தது மேலும் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட 11 வது வார்டு அப்பர் தெரு ஜோசப் ஸ்கூல் அருகில் மழைநீர் வாய்க்கால் சில நாட்களாக தூர்வாரப்படாமல் இருந்து வருகிறது மேலும் இதில் துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதியில் நோய் ஏற்படும் சூழ்நிலை உள்ளது , நேர் பஜார் தினசரி மார்க்கெட் செல்லும் வலியை ஆக்கிரமித்து கடைகள் கட்டப்பட்டு இருப்பதால் பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்துக்கு இடையாக இருப்பதால் உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றும்படி கோரிக்கை மனுவில் குறிப்பிட்டிருந்தது. இந்நிகழ்வில் தலைவர் சுரேஷ்குமார் செயலாளர் ராஜாஅமுதன் பொருளாளர் கார்த்திகேயன் மற்றும் உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்..

# பொதுமக்களுக்கும் காவல்துறைக்கும் நட்புணர்வு ஏற்படுத்த விளையாட்டுப் போட்டிகள் நடத்த கோரிக்கை கடிதம்



சிவகங்கை, ஆக.08-
சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் லாக்கப் டெத் எதிரொலியாக காவல்துறைக்கும் பொது மக்களுக்கும் நட்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொதுமக்கள் நலன் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு சங்கம் சார்பில் 10 அம்சங்கள் கொண்ட கோரிக்கைகளை சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத்திடம் PUBLIC WELFARE PROTECTION AND AWARENESS ASSOCIATION உறுப்பினர்கள் மனு அளித்தனர்.அதில் அனைத்து காவல் நிலையத்திலும் பொதும க்களை அமர வைத்து விசாரணை செய்ய வேண்டும் , அனைத்து காவல் நிலையத்திலும் பொதும க்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும். அனைத்து காவல் நிலையத்திலும் பொது மக்களுக்கு குடிநீர் வசதி செய்திட வேண்டும். அனைத்து காவல் நிலையங்களிலும் இரவு 8 மணிக்கு மேல் பெண்களை வைத்து விசாரணை செய்வதை தடுக்க வேண்டும். சில காவல் நிலையங்களில் சம்பந்த மில்லாத வாகனங்கள் இருக்கின்றது வெளி நபர்கள் பார்க்கிங் வசதியாக காவல் நிலையத்தில் வாகனங்களை நிறுத்தி செல்வது தவிர்க்க வேண்டும். அனைத்து காவல் நிலையத்தில் உள்ள வாகனங்களை ஏலம் விடுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். சிவகங்கை நகர் பகுதியில் முக்கிய இடமான தினசரி காய்கறி சந்தை மற்றும் உழவர் சந்தையில் ஞாயிற்றுக்கிழமைகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள சூழ்நிலையில் போக்குவரத்து காவலர்கள் அமர்த்தி பொதுமக்களுக்கு சிரமமின்றி பாதுகாத்திட வழிவகை செய்ய வேண்டும். பொதுமக்களுக்கும் காவல் அதிகாரிகளுக்கும் நட்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆலோசனைக் கூட்டம் விளையாட்டுப் போட்டிகள் நடத்த முயற்சி செய்ய வேண்டும். அவசர எண் 100 செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் மத்தியில் சரியான வரவேற்பு இல்லை ஆகையால் தங்களின் முயற்சியால் புதுப்பொலிவுடன் அவசர தேவை பூர்த்தி செய்யும் வகையில் புதிய நம்பர் ஆறுமுக முயற்சி செய்தல் பொதுமக்கள் சார்பாக வரவேற்பு கூடும் என குறிப்பிட்டு இருந்தது.. இந்நிகழ்வில் தலைவர் சுரேஷ்குமார் செயலாளர் ராஜஅமுதன்,பொருளாளர் கார்த்திக்கேயன் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்



# அலங்கியம் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு தினம்

திருப்பூர், ஆக.08-
திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் - முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் எஸ்வி செந்தில்குமார் ஆணைக்கிணங்க., முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தேவிகுப்பு தலைமையில், திமுக மாவட்டஒன்றியஊராட்சியின் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு, கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்தும் மலர்தூவி மரியாதை செலுத்தினர்..




# வேலூரில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தமிழ் கனவு நிகழ்ச்சி

வேலூர், ஆக.08-
வேலூர் மாவட்டம், வேலூர் ஊரிசு கல்லூரி டிபோர் அரங்கத்தில், மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடை பெற்றது. மாவட்டாட்சியர் சிறப்புரையாற்றி துவக்கி வைத்ததை தொடர்ந்து, இந்நிகழ்ச்சியில் சொற்பொழிவாளர்/ வழக்கறிஞர் அ.அருள் மொழி, தமிழ்நாடு கண்ட புதுமை பெண்கள் என்ற தலைப்பில் சிறப்புரை யாற்றி, தரமான கேள்விகளை எழுப்பிய மாணவர்களுக்கு கேள்வியின் நாயகன் என்ற சான்றிதழை வழங்கி பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் முனைவர். அ.மலர், முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் ஸ்ரீதர், ஊரீசு கல்லூரி முதல்வர் ஆனிகமலா ப்ளாரன்ஸ் கல்லூரி மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம். ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூபாய். 5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடம் கட்டும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.



■ மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்திற்குட்பட்ட 612 குடும்ப அட்டைகள் கொண்ட டி.ஆண்டிப்பட்டி நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு மேற்கொண்டார்

### "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 8.8.2025 அன்று

# சாக்கோட்டை, கண்ணங்குடி, சிங்கம்புணரி, திருப்பத்தூர், இளையான்குடி, காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.08-
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 8 ஆம் தேதி சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிறுகப்பட்டி, களத்தூர், நாட்டுச்சேரி ஆகிய பகுதிகளுக்கென சிறுகப்பட்டி ஊராட்சியிலுள்ள மணி மஹாலிலும், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூசலாங்குடி, தேரளப்பூர், களத்தூர், புத்துரணி ஆகிய பகுதிகளுக்கென தேரளப்பூர் சமூதாயக் கூடத்திலும், சிங்கம் புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எ.மேலையூர், கோழிகுடிப்பட்டி, எம்.சூரக்குடி, முறையூர், மருதிப் பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென முறையூர் ஊராட்சிலுள்ள சமூதாயக்கூடத்திலும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பி.கருங்குளம், வடமாவளி, திருகோஷ்டியூர், பிராமணப்பட்டி, சுண்ணாம்பிருப்பு ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென திருகோஷ்டியூர் ஊராட்சியிலுள்ள தேவர் மஹாலிலும், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குமாரக்குறிச்சி, குறிச்சி, மேலையூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென குறிச்சி ஊராட்சியிலுள்ள சமூதாயக்கூடத்திலும், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சொக்கநாதபுரம் ஊராட்சி பகுதிகளுக்கென சொக்கநா தபுரம் ஊராட்சியிலுள்ள தொட்டிக்கருப்பன் கல்யாண மண்டபத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம். எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடை பெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



## தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வேலூரில் பேச்சு

வேலூர், ஆக.08-
வேலூர் மாவட்டம், ஆஃபீஸர்ஸ் லைன், டோல்கேட், பங்ஷன் ஹாலில்,வேலூரில், தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் வேலூர் மாவட்ட பூத் முகவர்கள் ஆலோசனை கூட்டம், மாவட்ட செயலாளர் புருஷோத் தமன் தலைமையிலும், ஜெகதீசன் வரவேற்புரையில், மாவட்ட பொருளாளரும், காட்பாடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான செந்தில் குமார் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் மற்றும் மாநில பொருளாளரும், உயர் மட்டக்குழு உறுப்பினர் மற்றும் மண்டல தேர்தல் பொறுப்பாளருமான சுதீஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் முன்னாள் எம்எல்ஏ நல்லதம்பி, திருநாவுக்கரசு, சண்முகம் குமார் திருமூர்த்தி, சாக்கு முத்தரசு முருகன்னு சுரேஷ் பாபு சிட்டிபாபு மணிகண்டன் தேவன் யுவராஜ், கேப்டன் மன்றம் சுரேஷ் அண்ணாதுரை முத்து வேல்முருகன் ராமமூர்த்தி, இளைஞர் அணி ராஜ்குமார் முருகன் ஸ்டீபன் வேலூர் சரத்குமார் மகள் மகளிர் அணி மகாலட்சுமி புருஷோத்தமன் குணசுந்தரி லதா ஜோதி முருகன் நிஷா, மாணவரணி கோகுல் மோட்டார்ஸ் தொழிலதிபர் வி.பி சுந்தரவடிவேல் மற்றும் அனைத்து பணி பிரிவினர் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என திரளாக கலந்து கொண்டனர். இறுதியில் பல்லாவரம் பகுதி செயலாளர் திருமூர்த்தி நன்றி உரையாற்றினார்



## அருள்மிகு ஸ்ரீ பூங்கா முருகன் திருக்கோவில் உண்டியல் எண்ணும் பணியினை மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது

மதுரை, ஆக.08-
மதுரை மாநகராட்சி அருள்மிகு ஸ்ரீபூங்கா முருகன் திருக்கோவில் உண்டியல் எண்ணும் பணியினை மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது.

மதுரை மாநகராட்சி இராஜாஜி பூங்கா அருகே அருள்மிகு ஸ்ரீ பூங்கா முருகன் திருக்கோவில் அமைந்துள்ளது இத்திருக்கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருகை தந்து வழிபடுகின்றனார். இக்கோவிலில் வைக்கப்பட்டுள்ள உண்டியல்கள் காலை திறக்கப்பட்டு எண்ணப்பட்டது. உண்டியல் எண்ணும் பணியில் கோவில் பணியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஈடுபட்டனர் உண்டியலில் ரூ.6 லட்சத்து 78 ஆயிரத்து 54 காணிக்கையாக செலுத்தப்பட்டு இருந்தது.

இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் பிரதீபா, ஆய்வாளர் இளவரசி, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், கணக்கு அலுவலர் (பொது) பாலாஜி, மைய வருவாய் பிரிவு கண்காணிப்பாளர் கண்ணன், மேலாளர் குமரேசன் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் கோவில் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை பகுதியில் நெடுஞ்சாலைத்துறையின் (திட்டங்கள் அலகு, மதுரை) சார்பில் ரூ.96.05 கோடி மதிப்பீட்டில், புறவழிச்சாலை பகுதி –II அமைப்பதற்கான பணியினை தொடங்கி வைத்தார்

சிவகங்கை, ஆக.08-
கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் , சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இளையான்குடி சாலை கல்குளம் பிரிவு பகுதியில், நெடுஞ்சாலைத்துறையின் (திட்டங்கள் அலகு, மதுரை) சார்பில் ரூ.96.05 கோடி மதிப்பீட்டில் புறவழிச்சாலை பகுதி II அமைப்பதற்கான பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் கொடியசைத்து தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக அரசின் அனைத்து துறைகளிலும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி இந்திய துணை கண்டத்தில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழும் வகையில் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

மேலும், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருவது மட்டுமின்றி, பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு, அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு உள்ளிட்டவைகளை ஏற்படுத்தி, மக்களின் அனைத்து தேவைகளையும், தமிழ்நாடு முதலமைச்சர் நிவர்த்தி செய்து வருகிறார்கள்.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி போன்ற அனைத்து அடிப்படை தேவைகளும் சிறப்பாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், சிவகங்கை மாவட்டத்தின் தலைநகரமான சிவகங்கை பகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில், முதற்கட்டமாக கடந்த 19.11.2023 அன்று காஞ்சிரங்கல் ஊராட்சி பகுதியிலிருந்து மொத்தம் 10.6 கிலோமீட்டர் தூரத்திற்கு புறவழிச்சாலை அமைப்பதற்கென மொத்தம் ரூபாய் 109.51 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு, மொத்தம் 7.00 கிலோமீட்டர் தொலைவிற்கு ரூபாய் 77.16 கோடி மதிப்பீட்டில் ஒதுக்கீடு பெறப்பட்டு, புறவழிச்சாலை அமைக்கும் பணி சிறப்பாக நடைபெற் றுள்ளது.

அதனைத்தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக கல்குளம் பிரிவு, இளையான்குடி சாலை பகுதியிலிருந்து, மொத்தம் 3.2 கிலோமீட்டர் தூரத்திற்கு புறவழிச்சாலை அமைப்பதற்கென நெடுஞ்சாலை துறையின் வாயிலாக திட்டமிடப்பட்டு, அதற்கென மொத்தம் ரூபாய் 96.05 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு, மொத்தம் 3.2 கிலோமீட்டர் தொலைவிற்கு முதற்கட்டமாக ரூபாய் 59.50 கோடி மதிப்பீட்டில் ஒதுக்கீடு பெறப்பட்டு, புறவழிச்சாலை அமைக்கும் பணி இன்றையதினம் சிறப்பாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இச்சாலையானது, இராமநாதபுரம் - நைனார் கோவில் - அண்டக்குடி இளையான்குடி சிவகங்கை - மேலூர் சாலையில் கி.மீ 70/6 ல் பிரிந்து தஞ்சாவூர் - மானாமதுரை சாலை NH226 (சந்திப்பு பகுதி) கீழக்கண்டனி கி.மீ 141/8ல் முடிவடைகிறது.

மேலும், 7.00 மீ தொலைவிற்கு ஓடுதள அகலமும், 1.50 மீ தொலைவிற்கு இருபக்கங்களிலும் கடின புருவங்களும், 1.00 மீ தொலைவிற்கு இருபக்கங்களிலும் மண் புருவங்களும், மொத்தம் 30.00மீ தொலைவிற்கு சாலையின் அகலமும் அமையப் பெற்றுள்ளது. இதில், 18 எண்ணங்களில் பெட்டி பாலங்களும், 2 எண்ணங்களில் சிறு பாலங்களும், 1 எண்ணத்தில் இரயில்வே மேம்பாலமும் அமையவுள்ளது.

இப்புறவழிச் சாலை அமைப்பதன் வாயிலாக மாவட்டத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாகவும், சிவகங்கை நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி களுக்கும் மிகுந்த பயனுள்ள வகையில் அமையும். இப்புறவழிச் சாலை திட்டத்தினை சிவகங்கை பகுதியில் ஏற்படுத்தித்தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பில் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்று பொதுமக்களின் தேவைகளை அறிந்து, திட்டங்களை செயல்படுத்துவதில் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து வருகிறார்கள் என கூட்டுறவு த்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கண்காணிப்பு பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள், மதுரை) ஆர்.கே.ரமேஷ், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை ஆனந்த், கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள், மதுரை) எம்.மோகனகாந்தி, உதவி கோட்டப்பொறியாளர்கள் ஏ.வெற்றிவேல் ராஜன் (திட்டங்கள்,பரமக்குடி), க.அரிமுகுந்தன் (தரக்கட்டுபாடு), உதவி பொறியாளர்கள் (திட்டங்கள், மதுரை) ஏ.சையது முகமது, திருமதி ஆர்.கஜலெட்சுமி (தரக்கட்டுபாடு), சிவகங்கை வட்டாட்சியர் சிவ ராமன், ஒப்பந்ததாரர் மீனாட்சி சுந்தரம் (நாட்ச் இந்தியா பிரைவேட் லிமிடெட்) மற்றும் நெடுஞ்சாலைத்துறையை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம் சிறுபாலை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வாழவந்தாள் அம்மன் ஆலயத்தில் 4ம் ஆண்டு முளைப்பாரி திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. மழை பெய்து விவசாயம் செழிக்க வேண்டி நடைபெற்ற முளைப்பாரி திருவிழா கடந்த வாரம் தொடங்கி தினமும் இரவு பெண்கள் பாரம்பரிய உடையணிந்து கும்மியாட்டம், ஆண்கள் வேஷ்டி சட்டை அணிந்து ஒயிலாட்டம் என சிறப்பாக நடைபெற்றது. திருவிழாவின் இறுதிநாளில் வானவேடிக்கைகள் முழங்க பெண்கள் கும்மி அடித்தும், ஆண்கள் ஒயிலாட்டம் ஆடியும் அதன் பின்பு 200க்கும் மேற்பட்ட பெண்கள் விரதம் இருந்து வளர்த்த முளைப்பாரியை வீதிகளில் தலையில் சுமந்து வீதி உலா வந்து அம்மனுக்கு தங்களது நேர்த்தி கடனை செலுத்தினர். விழாவை காண சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் கூடியிருந்து விழாவை கண்டு ரசித்தனர்.

## வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத்திட்டம் (அட்மா) 2025-26 இயற்கை வேளாண்மை குறித்து மாணவர்களுக்கான கண்டுணர்வு சுற்றுலா






சிவகங்கை, ஆக.08-
சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டாரம் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (INNOVATIVE ACTIVITES DISTRICT LEVEL) கீழ் இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை இடுபொருள்கள் தயாரிக்கும் முறைகள் குறித்து அரசு மேல்நிலைப்பள்ளி , கொல்லங்குடி 11ம் மற்றும் 12ம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு மதுரை வேளாண் பல்கலைக் கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த மாணவர்களுக்கான கண்டுணர்வு சுற்றுலாவில் 100 மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் அங்கக மண்ணின் தன்மையை பராமரித்தல் , மண் நுண்ணுயிர்களின் செயல்பாட்டினை அதிகரித்தல் , நோய் , களை மற்றும் பூச்சிகளிலிருந்து பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் பயிர் சுழற்சி பற்றியும் , பூச்சி , நோய் எதிர்ப்புசக்தி மிக்க பயிர்களை பயரிடுதல் போன்ற தொழில்நுட்பங்களை தலைவர் மற்றும் பேராசிரியர் இ.சுப்பிரமணியன் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். பேராசிரியர் நிர்மலா மாணவர்களுக்கு ரசாயன பயன்பாட்டிலிருந்து இயற்கை முறைக்கு மாற வேண்டிய முக்கியத்துவம் , மண் மகத்துவம் , இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகள் பற்றியும் உயிர்ம வேளாண்மையில் இடுபொருட்களான பஞ்வகாவ்யா, தசகவ்யா , ஜீவாமிர்த கரைசல் , மீன் அமிலம் மற்றும் பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறைகள் மற்றும் உபயோகிக்கும் முறைகள் , மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள் பற்றியும் செயல்விளக்கங்கள் மூலம் எடுத்துரைத்தார்.

பேராசிரியர் சுரேஷ் மாணவர்களுக்கு வருங்காலத்தில் நஞ்சு இல்லாத விவசாயம் செய்யும் முறைகள் மற்றும் தொல்லுயிர் கரைசல் , உயிர் உரங்கள் , அசோலா மற்றும் கம்போஷ்ட் தயாரிக்கும் முறைகள் , பசுந்தாள் உயிர் உரங்கள் மற்றும் பாரம்பரிய இரகங்கள் சாகுபடி முறைகள் பற்றி தொழில்நுட்பங்களை மாவணவர்களுக்கு எடுத்துரைத்தார். மாணவர்களுக்கான கல்வி சுற்றுலா ஜோதி வட்டார தொழில்நுட்ப மேலாளர் , காளிஸ்வரி மற்றும் வினிதா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

## வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் பகுதிகளில் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு

மதுரை, ஆக.08-
மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் பகுதிகளில் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூபாய் 5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடம் கட்டும் பணியினை ஆய்வு செய்தார். இந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தில் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் கொண்ட கட்டமாக கட்டப்படவுள்ளது. தரைத்தளமானது வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், ஒன்றியக் குழுத் தலைவர் அலுவலகம், மன்றக் கூட்ட அரங்கம் மற்றும் தேர்தல் பிரிவு கொண்ட தளமாகவும், முதல் தளமானது வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், பொறியியல் பிரிவு மற்றும் கோப்புகள் பராமரிக்கப்படும் பிரிவு கொண்ட தளமாகவும், இரண்டாம் தளமானது காணொளி காட்சி கூட்ட அரங்கு கொண்ட தளமாகவும் அமைப்ப தற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பின்னர் வாடிப்பட்டி வட்டம், வனச்சரக அலுவலக வளாகத்தில் வனத்துறை வேளாண் காடுகள் வளர்ப்புத் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 16.87 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணையில் நடவு செய்து வளர்க்க ப்பட்டு வரும் செடிகளின் ரகங்கள் மற்றும் செடிகளின் விற்பனை குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பண்ணையில் 20,000 தேக்கு, 5000 மகாகனி, 5000 குமிழ், 3000 தோதகத்தி, 4000 வேங்கை, 3000 செம்மரம் உள்ளிட்ட 50 ஆயிரம் மரக்கன்றுகளை மண் மற்றும் இயற்கை எருவுடன் பாலிதீன் கவர்களில் நிரப்பி, அவற்றை தினமும் ஏராளமான பெண்கள் பராமரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வாடிப்பட்டி ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் குறுங்காடுகளை ஏற்படுத்துதல், சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடுதல் உள்பட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பொதுமக்கள் வீடுகளில் வளர்க்க மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளன.

தொடர்ந்து வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கட்டக்குளம் கிராமத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மானியத்தில் புதிய வீடு கட்டப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்தார். கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 167 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளன.

பின்னர் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூபாய் 16.75 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 மீட்டர் உயரமுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் வழங்கப்படும் தண்ணீர் தரம் குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார். கட்டாய குளோரினேஷன் மற்றும் மேல்நிலை தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மேலும் வாடிப்பட்டி வட்டத்திற்குட்பட்ட 612 குடும்ப அட்டைகள் கொண்ட ஜி.ஆண்டிப்பட்டி நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார். மாற்றுத்திறனாளிகள் மற்றும் 70 வயது முதியோர்களுக்கு நியாய விலைக்கடை பொருட்களை வீட்டிற்கு நேரடியாக சென்று வழங்கும் திட்டம் தொடர்பாக எண்ணிக்கை மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து கேட்டிருந்தார்.

தொடர்ந்து வாடிப்பட்டி வட்டம், முருகன் கோவில் ஆர்ச் பகுதியில் செயல்பட்டு வரும் புஸ்பகம் குழந்தைகள் இல்லத்தை ஆய்வு செய்தார். ஆய்வின் பொழுது இல்லத்தில் தங்கியிருந்த 27 குழந்தைகளின் உடல்நிலை, கல்வி மற்றும் குடும்ப சூழ்நிலைகள் குறித்தும் குழந்தைகளின் அனுமதி, குழந்தைகள் நலக்குழுவின் ஆணை, இல்ல பதிவு குறித்தும், இல்ல கண்காணிப்பாளரிடம் கேட்டறிந்தார். மேலும் இல்லத்தில் உள்ள அடிப்படை ஆவணங்கள், குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட காலை மற்றும் மதிய உணவுகள் ஆய்வு செய்தார். இல்லத்தில் குழந்தைகள் பயன்படுத்தும் துயிலறைகள், சமையலறைகள், உணவருந்தும் அறைகள், அலுவலக அறைகள் ஆகியவற்றை பார்வையிட்டார்.

இந்த ஆய்வுகளின் போது வாடிப்பட்டி வட்டாட்சியர் இராமச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லெட்சுமிகாந்தம் கிருஷ்ணவேணி , மாவட்ட குழந்தைள் பாதுகாப்பு அலுவலர் தர்மசீலன், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில்9 பெண் ஓட்டுநர்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார்

மதுரை, ஆக.08-
மதுரை மாவட்டம், பெரியார் பேருந்து நிலைய வளாகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை சார்பில் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 9 பெண் ஓட்டுநர்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தெரிவிக்கையில்:

தமிழக அரசு கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயன்பெறும் பொருட்டு அரசாணை எண். 198 ன்படி கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் ஏற்படுத்த ப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசாணை எண். 56இன்படி தனி வாரியம் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் உள்ளிட்ட 19 நலவாரியங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் / திருநங்கை ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ வாகனம் வாங்குவதை ஊக்குவித்து, அதிக வருமான ஈட்டி சுயதொழில் செய்யும் வாய்ப்பினை உருவாக்கிட புதியதாக ஆட்டோ வாகனம் வாங்குவதற்கு ஆகும் செலவினத்தில் மானியமாக தலா ரூ.1,00,000 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு வழங்கும் திட்டம் அறிமுகப்படு த்தப்பட்டது.

மேற்படி திட்டத்தில் இதுவரை மதுரை மாவட்டத்தில் கடந்த 2023 முதல் தற்போதுவரை 1126 பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் மானியம் கோரி விண்ணப்பித்துள்ளனர். அதில் 644 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தலா ரூ.1,00,000/வீதம் ரூ.6,44,00,000 (ரூபாய் ஆறு கோடி நாற்பத்து நான்கு இலட்சம்) மானியமாக வழங்கப்பட்டுள்ளது என தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.




## கூடுதல் மகசூல் பெற தரமான விதைகளை தேர்வு செய்யுங்க விதை ஆய்வு துணை இயக்குநரின் தகவல்

சிவகங்கை, ஆக.08-

சிவகங்கை விதை ஆய்வு துணை இயக்குநர் இப்ராம்சா கூடுதல் மகசூல் கிடைக்க தரமான விதைகளை விவசாயிகள் தேர்வு செய்து பயிர் சாகுபடி செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

அவர் கூறியுள்ளதாவது: இவ்வருடம் செப்டம்பர்2025 முடிய இயல்பான மழை இருக்கும் எனவும் அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் முடிய உள்ள காலத்தில் பெய்யும் மழையளவு பல்வேறு காலநிலை காரணிகளை பொருத்துள்ளது எனவும் வானிலை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இச்சூழ்நிலையில் நெல் மற்றும் இதர பயிர்களின் சாகுபடிக்கு தரமான விதைகளை பயன்படுத்தினால் 1015 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும். தரமான விதை அரசு நிர்ணயித்த விதைச்சான்றளிப்பு தரத்தை பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்ச முளைப்புத்திறன், இனத்தூய்மை, புறத் தூய்மை, நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம், குறைவான பூச்சி நோய் தாக்குதல் மற்றும் வீரியம் கொண்டிருக்க வேண்டும். விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையினால் விதை விற்பனை நிலையங்களில் விதைகளை சேகரித்து ஆய்வு செய்து தரமற்ற விதைகளை தடைசெய்கின்றது.

விவசாயிகள் விதைக் கொள்முதல் செய்யும்போது விவசாயின் பெயர், முகவரி, பயிர், ரகம், காலாவதி நாள், குவியல் எண், அளவு, ரேட் மற்றும் மொத்தத்தொகை ஆகியவைகள் விலைப்பட்டியலில் இருத்தல் வேண்டும். விற்பனை நிலையத்தில் முளைப்புத்திறன் அறிக்கை மற்றும் பதிவுச் சான்று உள்ளதா என்பதையும் பார்க்க வேண்டும். விலைப்பட்டியல் கட்டாயம் பெற வேண்டும். கொள்முதல் செய்த விதையை அதிக வெப்பநிலை உள்ள இடத்தில் சேமித்து வைக்கக் கூடாது. ஒரு அட்டியில் 6 மூட்டைகள் மட்டும் அடுக்க வேண்டும். பூச்சிகொல்லிகள், உரங்கள் உள்ளிட்ட ரசாயனங்கள் அருகே வைக்க கூடாது. வேறு ரகங்களுடன் கலந்து விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றார்.

## திருப்பூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம் ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைபெற உள்ளது: மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தகவல்

திருப்பூர், ஆக.08-

தமிழ்நாடுமுதலமைச்சர் பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை 15.07.2025 அன்று தொடங்கி வைத்து நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் திருப்பூர் மாவட்டத்தில் நாளை 07.08.2025 வெள்ள கோவில் நகராட்சி வார்டு எண்.4,5,6 ஆகிய பகுதிகளுக்கு. வெள்ள கோவில் கட்சேரி வலசு (வ).ஸ்ரீ சாமுண்டிமஹாலிலும், திருமுருகன்பூண்டி நகராட்சி வார்டு எண்.14.15 ஆகிய பகுதிகளுக்கு. பாலாஜிநகர், சமுதாயக்கூடத்திலும், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கரடிவாவி, புளியம்பட்டி, மல்லேகவுண்டன் பாளையம் ஊராட்சிகளுக்கு கரடிவாவி ரங்கசாமி. மஹாலிலும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இடுவாய் ஊராட்சிக்கு இடுவாய் சமுதாயக் கூடத்திலும், முதலிபாளையம் ஊராட்சிக்கு முதலிபா ளையம் சமுதாயக்கூடத்திலும், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னவீரணம்பட்டி ஊராட்சிக்கு உடுமலை ப்பேட்டை சின்னவீரம்பட்டி முருகன் திருமண மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

" தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தொழில் முனைவோர் / சுய உதவிக்குழுக் கடன் திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும் / 18 வயது முதல் 55 வயதிற்குள் இருக்க வேண்டும்ஃ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும் / விண்ணப்பதார் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்ற அரசு திட்டங்களில் இருந்து எந்த மானியமும் பெற்றிருக்கக் கூடாது. (ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம், வருமானச் சான்று (ஆண்டு வருமானம் ரூ.3. இலட்சம் மிகாமல்), திட்ட அறிக்கை, பாஸ்போட் சைஸ் புகைப்படம்). ஆகிய ஆவணங்களை இணைத்தும்

இணையவழி வீட்டுமனைப் பட்டா விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும் / ஏற்கனவே ஆதிதிராவிடர் நலதுறை மூலம் வழங்கப்பட்ட பட்டா இடத்தில் வீடு கட்டி வசிப்பவராக இருக்க வேண்டும் / வாரிசுதாரர் / கிரையம் பெற்றவர் வீடு கட்டி இருக்க வேண்டும். (ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ், வருமானச் சான்று, குடும்ப அட்டை). ஆகிய ஆவணங்களை இணைத்தும், கல்வி உதவித்தொகை (பள்ளிப் படிப்பு / கல்லூரிப்படிப்பு): ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ / ஆதிதிராவிடர் மாணக்கர்களாக இருக்க வேண்டும். பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். (உண்மைச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்று, ஆதாருடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கு புத்தகம்). தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரியம் (புதிய உறுப்பினராக பதிவு செய்தல் / நலத்திட்ட உதவிகள் பெறுதல்) ஆகிய ஆவணங்களை இணைத்தும்,

தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு பெற்றிருக்க வேண்டும் (நலத்திட்ட உதவிகள் பெற) / குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.(புதிய உறுப்பினராக சேர) (உறுப்பினர் அட்டை (நலத்திட்ட உதவிகள் பெற), ஆதார் அட்டை, குடும்ப அட்டை,வங்கி கணக்கு புத்தகம் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், வேலை செய்யும் அலுவலகத்தின் அடையாள அட்டை (ஊராட்சி /பேரூராட்சி / நகராட்சி /மாநகராட்சி), குழந்தைகளின் கல்வி விபரம்). ஆகிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்கள் பெறவும் கூடுதல் வழிகாட்டுதலுக்கும் 04212971128, 2971128, 7338801274 ஆகிய அலுவலக எண்களை தொடர்பு கொள்ளலாம்.

எனவே,"உங்களுடன் ஸ்டாலின்"திட்டத்தில் உங்கள்பகுதிகளில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் மனுக்களை வழங்கி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர்டாக்டர் மனிஷ் நாரணவரே தெரிவித்தார்.




■ தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் ஆலோசனைப்படி, சென்னை கோயம்பேடு மாநில நிதிக் குழு அலுவலகத்தில், நிதிக்குழு தலைவர் அப்துல்லா தலைமையிலும்,செயலாளர் பிரதீப் முன்னிலையிலும் நடைபெற்ற, தமிழ்நாடு அரசின் 7வது மாநில நிதிக் குழு ஆணையத்தின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் மேம்பாட்டு பணிகள் குறித்து வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் மேயர் ந. தினேஷ் குமார் கலந்து கொண்டார்.




■ திருப்பூர் மாநகராட்சி வார்டு 46 காங்கேயம் சாலையில் உள்ள ராக்கிப்பாளையம் பகுதியில் மழை நீர் வடிகால் கட்டப்பட்டதை பார்வையிட்டு மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் நேற்று (ஆக07) ஆய்வு மேற்கொண்டார் உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்





■ திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் 08/08/2025 ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தாராபுரம் ஒன்றிய கழக அலுவலகத்தில் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது இதில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ் தனசேகர் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.சிவகுமார் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஆபீஸ் தோட்டம் செல்லமுத்து குப்பிச்சிபாளையம் முருகேஷ் மாவட்ட பிரதிநிதி வி.நந்தகுமார் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு ஊராட்சி தாராபுரம் நகரம் திரு கவின் நாகராஜ் ஒன்றிய குழு முன்னாள் துணைத் தலைவர் இ. சசிகுமார் நட்ராஜ் ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் பி.ரவிச்சந்திரன் ஒன்றிய துணை செயலாளர் இ.புவனேஸ்வரி சின்னக்கம்பாளையம் பேரூர் இளைஞரணி அமைப்பாளர் கவியரசு தாராபுரம் நகர சேக் ஒன்றிய அயலக அணி அமைப்பாளர் கண்ணன் என்கிற முத்துகிருஷ்ணன் நஞ்சியம்பாளையம் அபிராமி முருகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



## முடிச்சூர் நிர்வாகிகள் சார்பில் அதிமுக மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

சிட்லபாக்கம், ஆக.08-

செங்கல்பட்டு மாவட்டம் அதிமுக கழக பொதுச்செயலாளர் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் ஆசியோடு பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.பி மனோகரன் தலைமையில் முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர் ஏற்பாட்டில் முடிச்சூர் மகளிர் அணி தலைவரும் முன்னாள் வார்டு உறுப்பினருமான லலிதா சுரேந்திரன், பரங்கிமலை மேற்கு ஒன்றிய எம்ஜிஆர் மன்ற துணைச் தலைவர் பா.தவமணி ஆகியோர் முன்னிலையில் முடிச்சூர் கழக நிர்வாகிகள் அலுவலகத்துக்கு சென்று மாவட்ட கழகம் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் சந்தித்து முடிச்சூர் கழக நிர்வாகிகள் சார்பில் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

இந்த நிகழ்ச்சியில் ராஜேந்திரன், கஜேந்திரன், நாராயணன், முருகானந்தம், பாக்யராஜ், பல்லவன் நகர் ராஜா குரங்கு பாபு, சீனிவாசன், ரமேஷ், ஆதிகேசவன், செந்தில்குமார், கார்த்தி, பாலாஜி, கற்பக சீனிவாசன், ஜேதிஸ்வரி, தேவிகா, சீனிவாசன், நித்தியா, விஜயதரணி புவனேஸ்வரி அம்மாள் மஞ்சு, மஞ்சு விஜய்கணேஷ் மற்றும் முடிச்சூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சால்வை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்




## பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு 1000பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

பம்மல், ஆக.08-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் ஒப்பற்ற கழகத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு பம்மல் இரட்டை பிள்ளையார் கோயில் அருகில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி 1000பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னாடிகள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



■ திருப்பூர் மாவட்டம் சிக்கனூத்து அருகில் ரோந்து பணியின் போது உயிரிழந்த குடிமங்கலம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குடும்பத்தினரை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் சுவாமிநாதன் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார் உடன் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் மாநகர துணை காவல் ஆணையர் சத்தியன் திருப்பூர் அரசு மருத்துவமனை கல்லூரி மருத்துவமனை முதல்வர் பத்மினி ஆகியோர் உடன் இருந்தனர்..



## தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம், 53வது மற்றும் 60-வது வார்டு ஆகிய வட்டங்களில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்

தாம்பரம், ஆக.08-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள் திட்டங்களை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிதம்பரத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி, 4வது மண்டலம், 53 - 60 ஆகிய வட்டங்களில்*, தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, 4வது மண்டல குழு தலைவர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி..காமராஜ், மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, வட்ட செயலாளர் ஆர்.சஞ்சிவி, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்




■ மதுரை மாவட்டம். பெரியார் பேருந்து நிலைய வாளகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுதுறை சார்பில் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியயத்தில் பதிவு பெற்ற 9 பெண் ஓட்டுநர்களுக்கு ஆட்டோ ரிக் வாகனங்களை தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161